## ஜனவரி – 05 – வெள்ளி

**புனித ஜோன் நியூமன்**

**அனைத்துலகோரே! ஆண்டவரை ஆர்ப்பரித்து வாழ்த்துங்கள்!**

**திபா. 100:1**

---------------------------------------------------------------

### முதல் வாசகம் : 1 யோவான் 3 : 11 – 21

நீங்கள் தொடக்கத்திலிருந்து கேட்டறிந்த செய்தி இதுவே் நாம் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்த வேண்டும். காயினைப்போல் நீங்கள் இராதீர்கள் அவன் தியோனைச் சார்ந்தவன் ஏனெனில் தன் சகோதரரைக் கொலை செய்தான். எதற்காக அவரைக் கொலை செய்தான்? ஏனெனில் அவன் செயல்கள் தீயனவாக இருந்தன. அவன் சகோதருடைய செயல்கள் நேர்மையானவையாக இருந்தன. சகோதர சகோதரிகளே, உலகம் உங்களை வெறுக்கிறதென்றால் நீங்கள் வியப்படையவேண்டாம். நாம் சகோதர அன்பு கொண் டுள்ளதால், சாவிலிருந்து வாழ்வுக்குக் கடந்து வந்துள்ளோமென அறிந்துள்ளோம் அன்பு கொண்டிராதோர் சாவிலேயே நிலைத்தி ருக்கின்றனர். தம் சகோதரர் சகோதரிகளை வெறுப்போர் அனைவரும் கொலையாளிகள். எந்தக் கொலையாளிடமும் நிலைவாழ்வு இராது என்பது உங்களுக்குத் தெரியுமே. கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக்கொடுத்தார். இதனால் அன்பு இன்னதென்று அறிந்துகொண்டோம். ஆகவே நாமும் நம் சகோதரர் சகோதரிகளுக்காக உயிரைக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். உலகச் செல்வத்தைப் பெற்றிருப்போர் தம் சகோதரர் சகோதரிகள் தேவையில் உழல்வதைக் கண்டும் பரிவு காட்டவில்லையென்றால் அவர்களிடம் கடவுளின் அன்பு எப்படி நிலைத்திருக்கும்? பிள்ளைகளே, நாம் சொல்லிலும் பேச்சிலும் அல்ல, செயலில் உண்மையான அன்பை விளங்கச் செய்வோம். இதனால் நாம் உண்மையைச் சார்ந்தவர்கள் என அறிந்து கொள்வோம் நம் மனச்சான்று நாம் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளித்தாலும், கடவுள் திருமுன் நம் உள்ளத்தை அமைதிப்படுத்த முடியும். ஏனெனில் கடவுள் நம் மனச்சான்றைவிட மேலானவர் அனைத்தையும் அறிபவர். அன்பார்ந்தவர்களே, நம் மனச்சான்று நாம் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்காதிருந்தால் நாம் கடவுள் திருமுன் உறுதியான நம்பிக்கை கொண்டிருக்க முடியும்.

**பதில்பாடல் :** அனைத்துலகோரே ஆண்டவரை ஆர்ப்பரித்து வாழ்த்துங்கள்

### நற்செய்தி : யோவான் 1 : 43 - 51

மறு நாள் இயேசு கலிலேயாவுக்குச் செல்ல விரும்பினார். அப்போது அவர் பிலிப்பைக்கண்டு, ”என்னைப் பின்தொடர்ந்து வா” எனக் கூறினார். பிலிப்பு பெத்சாய்தா என்னும் ஊரைச் சேர்ந்தவர். அந்திரேயா, பேதுரு ஆகியோரும் இவ்வூரையே சேர்ந்தவர்கள். பிலிப்பு நத்தனியேலைப் போய்ப்பார்த்து, இறைவாக்கினர்களும் திருச்சட்ட நூலில் மோசேயும் குறிப்பிட்டுள்ளவரை நாங்கள் கண்டு கொண்டோம். நாசரேத்தைச் சேர்ந்த யோசேப்பின் மகன் இயேசுவே அவர்” என்றார். அதற்கு நத்தனியேல், ”நாசரேத்தி லிருந்து நல்லது எதுவும் வர முடியுமோ?” என்று கேட்டார். பிலிப்பு அவரிடம், ”வந்து பாரும்” என்று கூறினார். நத்தனியேல் தம்மிடம் வருவதை இயேசு கண்டு, ”இவர் உண்மையான இஸ்ரயேலர், கபடற்றவர்” என்று அவரைக் குறித்துக் கூறினார். நத்தனியேல், ”என்னை உமக்கு எப்படித் தெரியும்?” என்று அவரிடம் கேட்டார். இயேசு, ”பிலிப்பு உம்மைக் கூப்பிடுவதற்கு முன்பு நீர் அத்தி மரத்தின்கீழ் இருந்தபோதே நான் உம்மைக் கண்டேன்” என்று பதிலளித்தார். நத்தனியேல் அவரைப் பார்த்து, ”ரபி, நீர் இறை மகன் நீரே இஸ்ரயேல் மக்களின் அரசர்” என்றார். அதற்கு இயேசு, ”உம்மை அத்திமரத்தின்கீழ் கண்டேன் என்று உம்மிடம் சொன்னதாலா நம்புகிறீர்? இதைவிடப் பெரிய வற்றைக் காண்பீர்” என்றார். மேலும் ”வானம் திறந்திருப்பதையும் கடவுளின் தூதர்கள் மானிடமகன்மீது ஏறுவதையும் இறங்கு வதையும் காண்பீர்கள் என மிக உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்” என்று அவரிடம் கூறினார்.

**தியானம்:** தாயின் கருவறையில் உருவாகும் முன்பே எங்களை தெரிந்தெடுத்த இறைவன், நாங்கள் ஒருவரை ஒருவர் அன்பு செய்து, இறைவனது அழைப்பை நம்பிக்கையுடன் ஏற்றுக்கொள்ள அழைக்கப்பட்டிருக்கின்றோம். ஆம் இன்றைய வாசகங்களில் சகோதர சகோதரிகளை வெறுப்போர், அவர்களை ஏற்றுக்கொள்ள மறுப்போர் கொலையாளிகள் என்று பார்க்கின்றோம். (1யோவா.3:15) இன்று நாங்களும் எங்கள் சகோதர, சகோதரிகள் மத்தியில் புரிந்துணர்வு அற்ற தன்மையினால், மற்றவர்கள் எதிராகக் கூறியதாக சொல்வதைக் கேட்டு நம்பி பகைமை உணர்வுடன், அன்பிலிருந்து விலகி வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இவ்வாறான பகைமை உணர்வுகள் எங்கள மத்தியில் இருந்து எடுபட வேண்டும். அன்பு சமாதானம், ஒற்றுமை நிலவ வேண்டும். இவ்வாறு அன்பு கொண்டு வாழ்ந்தால்தான் இறைவனது ஆசீர்வாதம் எமக்கு பொழியப்பட்டு அவர் எம்மை அழைக்கும் பொழுது நம்பிக்கையுடன் இயேசுவே மெசியா என்று ஏற்று அவர் பின்னே செல்ல முடியும். இருப்பினும் எங்களில் ஒருசிலர் அவர் யார்? எப்படிப்பட்டவர் என்று வேண்டாத கேள்விகள் கேட்டு வாழ்ந்துகொண்டுதான் இருக்கின்றோம். எனவே அன்று நத்தனியேல் பிலிப்புவை “வந்து பாரும்” என்று அழைத்தாரோ அதேபோன்று இயேசுவை ஏற்றுக் கொள்ள தயங்குவோருக்கு அவர் யார்? எப்படிப்பட்டவர் என்பதை அறிவதற்கு “வந்து பாருங்கள்” என்று அவர்களை அழைத்து அவர்கள் இயேசுவைக் ஏற்றுக்கொள்ள தயார்படுத்துவோம்